**தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஓய்வூதியத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 ஜூலை 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஜனவரி 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) இவ் அறிக்கையில் இலக்கம் 1.6.4(அ), 1.6.5 மற்றும் 1.6.6(அ)(இ)(iii) ஆகிய பந்திகளில் உள்ளடங்கிய அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது ஏனைய பெறுவனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் அரச சேவை சேமலாப நிதியம் மற்றும் ஆசிரிய விதவைகள் அநாதைகள் நிதியம் ஆகிய இரண்டு நிதியங்களின் கீழ் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 43,437,572,432 தொகை மற்றும் ஆண்டின் போது கொடுப்பனவுகள் ரூபா 43,255,697,553 தொகையும் உட்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் இந்த இரண்டு நிதியங்களுக்காகவும் வேவ்வேறாக வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஆசிரிய விதவைகள் அநாதைகள் நிதியம் தொடர்பான சட்டத்தை திருத்துதல் மற்றும் அரச சேவை சேமலாப நிதியம் தலைப்பு 253 இன் கீழ் செயற்படுத்துவதற்குப் பதிலாக வேறாக நிதியம் ஒன்று என செயற்படுத்துதல் செய்யப்பட வேண்டும். | பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 07/2006 பிரகாரம் திறைசேரியினால் நியமனம் செய்யப்பட்ட விஷேட குழு ஒன்றின் மூலம் நிதியத்திற்கு உரிய சட்டத்தை திருத்தி மூடுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது வரை இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த இரண்டு நிதியங்களின் கீழ் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் மற்றும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் ஏனைய பெறுவனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளது. |

**1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்கான வருமானமல்லாத பெறுவனவுகள் மற்றும் ஏனைய தலைப்புகளின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 113,171,795 தொகை மிகையாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2019 திசெம்பர் 03 திகதிய 271/2019 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | ஆண்டிற்கான வருமானம் என பணமாக பெறப்பட்டிருந்த பெறுமதிகள் மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் உட்படுத்தப்பட்டதுடன் அடுத்த நிதியாண்டிற்கான குறுக்குப் பதிவுகள் மூலம் பெற்றிருந்த பெறுமதிகள் உட்படுத்தப்படும் நிலுவைச் சமன்பாட்டின் படி பெறுமதிகளை உட்படுத்தப்படுவதற்கு குறித்துக் கொண்டேன். |
| (ஆ) | ஏனைய தலைப்புகளுக்காக, உதவி நிதிகள் மற்றும் மாற்றங்கள், ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் ரூபா 79,426,330 தொகை மிகையாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | ஆண்டிற்கான பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தலுக்கான செலவுகள் ரூபா 3,100,499 தொகை குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | ஆண்டின் போது முற்பணம் "பீ" கணக்கின் கீழ் அறவீடுகளின் பெறுமதி ரூபா 35,725,209 தொகை குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. மேலும் அந்த கொடுப்பனவு பெறுமதி நிதி நிலைமைக் கூற்றின் படி ரூபா 50,977,977 தொகையும் திறைசேரி அச்சுப் பிரதியின் படி ரூபா 51,343,912 தொகையும் ஆக காணப்பட்டமையால், அந்த எண்ணிக்கைகளிடையே ரூபா 365,935 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | முற்பண "பீ" கணக்கின் கீழ் காணப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அறவீடுகள் என ஆண்டின் போது பணமாக கொடுப்பனவுகள் மற்றும் பணமான பெறுவனவுகளின் பெறுமதிகள் மாத்திரம் உட்படுத்தப்பட்டு நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த கணக்காண்டிற்காக குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் உட்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | கூடிய விதமாக நிலுவைச் சமம்பாட்டின் படி பெறுமதிகள் உட்படுத்துவதற்காக குறித்துக்கொண்டேன். |
| (உ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் வைப்புக்கள் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதிகள் முறையே ரூபா 1,903,911 தொகை மற்றும் ரூபா 2,475,252 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | முற்பண ''பீ'' கணக்கின் கீழ் காணப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அறவீடுகள் என ஆண்டின் போது பணமாக கொடுப்பனவு மற்றும் பணமான பெறுவனவுகளின் பெறுமதிகள் மாத்திரம் உட்படுத்தப்பட்டு நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த கணக்காண்டிற்காக குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் உட்படுத்தப்பட கூடிய விதமாக நிலுவைச் சமம்பாட்டின் படி பெறுமதிகள் உட்படுத்துவதற்காக குறித்துக்கொண்டேன். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **பிணைப் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் விபரங்கள் அடங்கிய பிணைப் பதிவேடு தயாரித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கக் கூடிய விதமாக பிணை வைக்க வேண்டிய உத்தியோத்தர் தொடர்பாக பிணைப்பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தி பிணை வைப்பதற்காக மற்றும் பிணை வைக்க வேண்டிய உத்தியோர்களின் தகவல்களை உட்படுத்தி பிணைப் பதிவேடு ஒன்று தயாரிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |

### 1.6.4 கணக்காய்வு சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியக் கோப்பு ஒன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு 3 பிரதேசச் செயலகங்களில் கோப்புக்களின்றி ஓய்வு பெற்றவர்கள் 60 பேருக்காக பரிசோதனை மட்டத்திலான தற்காலிக கோப்புக்களுடன் ஓய்வு பெற்றோர் 12 பேருக்காக ஓய்வூதியம் செலுத்தப்பட்டு காணப்பட்டது. | கோப்புக்கள் இன்றி ஓய்வு பெற்றோருக்கு தற்காலிக கோப்புக்கள் தயாரிக்கப்பட்டு விரைவாக அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன், தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத ஓய்வு பெற்றோரின் ஓய்வூதியத்தை நிறுத்தி வைக்கப்பட வேண்டும். | தற்காலிக கோப்புக்கள் தயாரிப்பதற்கு தகவல்கள் கோரப்பட்டுள்ள ஓய்வு பெற்றோர் எண்ணிக்கை கொழும்பு, கங்கவட கோரளை, குருநாகல் ஆகிய பிரதேசச் செயலங்களில் 60 உம், பரிசோதனை மட்டத்தில் காணப்பட்ட தற்காலிக கோப்புக்களை உடைய ஓய்வு பெற்றோரின் எண்ணிக்கை கொழும்பு, குருநாகல் மற்றும் யடிநுவர ஆகிய பிரதேச செயலகங்களில் 12 உம் ஆகும். |
| (ஆ) | 2019 நவம்பர் மாதத்தின் தரவு முறைமையின் படி வெளிநாடு சென்றுள்ள ஓய்வு பெற்றோர் ஒருவருக்கு சிவில் ஓய்வூதியம் 2 வீதம் செலுத்தப்பட்டுள்ள 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2021 ஜனவரி மாதம் அளவில் தரவு முறைமையில் அந்த 34 ஓய்வூதியங்களில் 13 இன் வகைக் குறியீடு மாற்றப்பட்டிருந்துடன், 12 இன் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்தன. எனினும், பரிசோதனைக்காக அவற்றில் 28 கோப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு ஓய்வு பெற்றோருக்கு சிவில் ஓய்வூதியம் ஒன்றுக்கு மேற்பட்ட தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்படாதவாறு தரவு முறைமையில் அகக் கட்டுப்பாடு முன்னேற்றப்பட வேண்டியிருந்ததுடன், கொடுப்பனவு நிறுவத்தப்பட்டிருந்த ஓய்வூதியங்களின் மிகையாக செலுத்தப்பட்டிருந்த ஓய்வூதியங்களை அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஓய்வூதிய வகைக்குறியீட்டு இலக்கம் தரவு முறைமையில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ஓய்வூதியக் கொடுப்பனவு தரவு முறைமையின் படி, 2014 திசெம்பர் முதல் 2018 மே வரை ஒரே பெயர் மற்றும் ஒரே வங்கிக் கணக்கு இலக்கத்திற்காக இரண்டு சிவில் ஓய்வூதியங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு கோப்பில் அத்தியவசியமாக ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. மேலும், மிகை | கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் ஓய்வூதியக் கோப்பொன்றில் ஓய்வூதிய விண்ணப்பம் மற்றும் ஓய்வூதிய வழங்கல் பத்திரம் மற்றும் வரலாற்றுக் குறிப்பு போன்ற ஆவணங்கள் அடங்கப்பட வேண்டும். மேலதிக கொடுப்பனவு | குறிப்பிட்ட ஓய்வூதியக் கோப்பு தற்காலிக கோப்பொன்றாக இனங்காணப்பட்டிருந்ததுடன் ஓய்வு பெற்றவருக்கு அறிவித்து குறிப்பிட்ட தகவல்களை பெற்றுக் கொள்வதற்று நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தால் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தப்பட்டிருந்தால் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை செயற்திறனுடன் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்காக கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வ அதிகாரத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | செலவுகள் மேற்கொள்ளும் மற்றும் வருமானத்தை சேகரிக்கும் அதிகாரம் நிதிப் பிரமாணங்களின் படி மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வூதியம் செலுத்தும் செய்முறை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு அறிவிக்கப்படவில்லை என ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த | -மேற்படி- | ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய ஏனைய அரச நிறுவனங்களில் இருந்தும் பதில்களை பெற்று பதிலளிக்கப்பட வேண்டியிருந்தமையால் காலதாமதம் ஒன்று காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். |

போதிலும், அறிக்கையின் 3.3 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(ஆ) | வழங்கப்படுகின்ற துணை கட்டுநிதி வழங்கப்பட்ட கருமங்கள் பூர்த்தி செய்யப்பட்ட உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 03 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 142,000 தொகைக்கான துணைக்கட்டு நிதியினை தீர்ப்பதில் 09-52 இடைப்பட்ட நாட்கள் கால வீச்சில் தாமதமாகியிருந்ததென அவதானிக்கப்பட்டது. | வழங்கப்படுகின்ற துணை கட்டுநிதி அது வழங்கப்பட்ட கருமம் பூர்த்தியடைந்ததுடன், தீர்த்துக்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கட்டுநிதிகளை தீர்க்கும்படி அனைத்து நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 மே 30 திகதிய 2/2019 திகதிய பொது நிறுவாக சுற்றறிக்கையின் பந்தி 4 | அரசாங்கத்திலிருந்து ஓய்வூதியம் ஒன்று பெறும் நபரொருவரின் இறப்பு பதிவு செய்யும் போது அது மாவட்ட பதிவாளர், மேலதிக மாவட்ட பதிவாளர்களுக்கு அல்லது பதிவாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டு அவ்வறிக்கையின் பிரதியொன்று வாரத்திற்கு ஒருமுறை தனக்கு அனுப்பும் படி குறிப்பிட்ட பிரதேச செயலாளர்கள் தமது நிருவாகத்திற்கு கீழுள்ள பதிவாளர்கள் மற்றும் மருத்துவப் பதிவாளர்களுக்கு அறிவுறை வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும், தெரிவுப் பரிசோதனையின் போது நாரம்மல, குருநாகல், யடிநுவர மற்றும் கங்கவட்டகோரளை ஆகிய பிரதேச செயலகங்களினால் அதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படும் படி பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் 04 பிரிவின் பிரகாரம் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கும் படி வட்டாரத்திலுள்ள அனைத்து பதிவாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டதென பிரதேச செயலாளர்கள் அறிவித்துள்ளார்கள். |
| (இ) | ஓய்வூதிய சுற்றறிக்கைகள் | | | |
| | (i) 2014 ஏப்ரல் 07 திகதிய 01/2011 (திருத்தம்) இலக்கங் கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கை. | அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு செய்முறைகளை முறைப்படுத்துவதற்காக முறையான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட்டுச் செல்லல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. தெரிவுப் பரிசோதனையின் படி கொழும்பு, பன்னலை மற்றும் நாரம்மலை ஆகிய பிரதேச செயலங்களில் ஓய்வூதிய உத்தியோகத்தரினால் அவ்வாறு கட்டுப்பாட்டுக கணக்கொன்று பேணப்பட்டுச் சென்றிருக்கவில்லை. | அனைத்து பிரதேச செயலகங்களிலும் ஓய்வூதியக் கொடுப்பனவு செய்முறைக்காக உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தமையால் முறையான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டு ஓய்வூதியச் செலவுகளின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்த வேண்டும். | ஓய்வூதிய செய்முறை மையப் படுத்தப்பட்ட தரவு முறைமையினால் மேற்கொள்ளப்படுவதனால் பிரதேச செயலகங்களில் வேறாக கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்படுவதற்கு முடியாமல் இருந்த போதிலும் கட்டுப்பாட்டுக் கணக்குகளை தயாரித்தல் பிரதேச செயலாளரின் பொறுப்பொன்றாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2018 ஜூன் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கையின் பந்திகள் 21 மற்றும் 29 | ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 01 திகதி முதல் அடுத்த வருடம் மார்ச் 31 திகதி வரையான காலப் பகுதியில் அனைத்து வெளிநாடு சென்றுள்ள ஓய்வு பெற்றோர் அவர்களின் உயிர்ச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாத ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியம் செலுத்துவதை அவ் ஆண்டு மே மாதம் முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ஆண்டிற்கான உயிர்ச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத வெளிநாட்டு ஓய்வு பெற்றவர் 5,156 பேரின் ஓய்வூதியம் 2019 நவம்பர் மாதம் வரை கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி கொடுப்பனவு நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொடுப்பனவு செய்முறைகளில் பலவீனங்களின் காரணமாக வங்கி முறைமை மூலம் மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கு 2018 ஆகஸ்ட் மாதம் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு நிறுத்தப்பட்ட ஓய்வூதியம் வங்கி முறைமைக்கு மாற்றும் போது எதிர்ப்புகள் மற்றும் விசாரணைக்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்துவதற்கு நேரிட்டது. 2019 ஆண்டின் உயிர்ச் சான்றிதழ்கள் வழங்கியிருக்காத வெளிநாடு சென்றுள்ளவர்களின் ஓய்வூதியத்தை நிறுத்துவதற்காக 2020 ஆண்டு முதல் எதிர்ப்பார்த்த போதிலும் தொற்றுநோய் நிலைமை காரணமாக அது நிறுத்தப்படவில்லை. |
| (iii) | 2015 செப்தம்பர் 14 திகதிய 09/2015 இலக்கம் மற்றும் 2011 நவம்பர் 4 திகதிய 08/2011 இலக்கங் கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கைகள் | 03 பிரதேச செயலகங்களில் 54 சந்தர்ப்பங்களில் ரூபா 2,028,101 தொகை பெறுமதியான இள வயதினரின் வங்கி சேமிப்புப் புத்தகங்கள் அவர்கள் 18 வயது பூர்த்தியடைந்த போதிலும் அவர்களிடம் ஒப்படைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நலன்களை உரித்தாக்கப்பட வேண்டும். | கொழும்பு பிரதேச செயலகத்தில் இருந்து கடிதங்கள் தபால் செய்யப்பட்ட போதிலும் ஒருவர் புத்தகத்தை பெற்றுக்கொண்டதாகவும், குருநாகல் பிரதேச செயலகத்தினால் இரண்டு பேர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் மீதியான பிள்ளைகளின் தகவல்கள் கிராம உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானக் குறியீடு 20.04.01.00 (மத்திய அரசு) இன் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 42,736,960 தொகை வருமானத்தில் இருந்து திருப்பி செலுத்தப்பட்டிருந்ததுடன், அக் கொடுப்பனவுகளில் ரூபா 41,310,201 தொகையினை உறுதிப்படுத்துவதற்காக 2001 ஜனவரி 15 திகதிய 01/2001 இலக்கங் கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரிவு 1(அ) பிரகாரம் குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து வரவு அறிவித்தல்கள் பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வரவு அறிவித்தல் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து வரவு அறிவித்தல்கள் கோருதல் மற்றும் ஞாபகக் கடிதங்கள் மூலம் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அறிக்கைகள் அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் அனுப்புதல் வரவு வைக்கப்படும் நிறுவனத்தின் பொறுப்பொன்றாகும். |
| (ஆ) | வருமானக் குறியீட்டிலக்கம் 20:04:01:00 (மத்திய அரசு) இன் கீழ் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக வரவு முறைமை ஒன்று பேணுவதற்கு ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நலன்கள் பெற்றுக்கொள்வதற்கு உரிய அங்கத்தர் எண்ணிக்கை தொடர்பாக சரியான தகவல்கள் காணப்படாமையின் காரணமாக விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்காக உரிமை மற்றும் பங்களிப்புத் தொகை திருப்பிச் செலுத்தல் போன்ற நலன்கள் உரித்தாக்கும் போது பங்களிப்புத் தொகை நிச்சயமாக மற்றும் தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்றதாக என திணைக்களத்தினால் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமல் உள்ளது. | பங்காளிப்பாளர்கள் மற்றும் பங்களிப்பு தொகை செலுத்துவது தொடர்பாக தரவு முறைமை ஒன்று தொடர்புடைய நிறுவனங்களின் உதவியுடன் ஓய்வூதியத் திணைக்களத்தினால் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து அரச உத்தியோகத்தர்களின் தரவுகள் நிகழ்வு நிலை முறைமையின் ஊடாக உட்படுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டமொன்று 2017 அக்தோபர் மாதம் முதல் அறிமுகப்படுத்தி இருந்த போதிலும் ஏனைய நிறுவனங்களின் உதவி கிடைக்காமையால் செயற்படுத்துதல் செயற்படாது இருக்கின்றது. அறவீடு செய்தல் விபரங்கள் இறுதியாக கடமையாற்றிய நிறுவனத்தினால் சான்றுபடுத்திய பின்னர் ஓய்வூதியக் கொடுப்பனவு ஆரம்பிப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதுடன் திருப்பிச் செலுத்தும் போது குறிப்பிட்ட வீதாசாரப் படி அறவீடு செய்யப்பட்டுள்ளதா என பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருமான குறியீட்டு இலக்கம் 20:04:02:00 கீழ் மாகாண சபைகளின் சமூக பாதுகாப்பு பங்களிப்புத் தொகை பெறுவனவுகள் மற்றும் நிலுவை பங்களிப்புத் தொகை நிறுவன ரீதியாக போலவே பங்களிப்பாளர்களின் படியும் நிச்சயமாக இனங்காணக்கூடிய விதமாக தர முறைமை ஒன்று தயாரித்திருக்கவில்லை. உள்ளூராட்சித் நிறுவனங்களினால் அறிவித்திருந்த பெறுமதிகளை நிலுவை வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 808,293,002 தொகைக்கான நிலுவை வருமானத்தின் சரியான தன்மை உறுதிப்படுத்துவதற்கும் அப்பெறுமதியை பங்களிப்பாளர்களின் படி வேறாக்குவதற்கும் முடியாதிருந்தது. | பங்களிப்பாளர்கள் மற்றும் பங்களிப்புத் தொகை கொடுப்பனவு தொடர்பாக தரவு முறைமை ஒன்று பேணப்பட்டு நிச்சயமாக பங்களிப்புத் தொகை கிடைக்கப்பெற்றதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து அரச உத்தியோகத்தர்களின் தகவல்களை உட்படுத்தி தரவு முறைமையொன்று வடிவமைக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2017 ஒக்தோபர் மாதம் முதல் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் ஏனைய நிறுவனங்களின் உதவி கிடைக்கப்படாமையால் மெதுவான போக்கில் காணப்பட்டது. மேல் மாகாண சபை தவிர ஏனைய மாகாண சபைகள், பங்களிப்புத் தொகை கணக்கு பொழிப்பு ஊடாக சேரிக்கப்பட்டு காசோலை ஒன்றின் மூலம் அனுப்பப்படுகின்றது. அனைத்து அரச நிறுவனங்களின் பெறுவனவுகள் மற்றும் நிலுவைத் தொகை தொடர்பாக பெறுவனவுகள் வருமானம் எனவும் மாகாண சபை நிலுவை வருமானக் கூற்றின் மீது நிலுவை வருமானமும் கணக்கீடு செய்யப்படுகின்றது. |
| (ஈ) | 2001 ஜனவரி 15 திகதிய மற்றும் 01/2001 இலக்கங் கொண்ட ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரிவு 2.2 இன் பிரகாரம் மாகாண சபையினால் அனைத்து அலுவலகங்களின் பங்களிப்பு தொகைக்காக ஒரு காசோலை வழங்கும் போது ஒவ்வொரு மாதத்தின் சேகரிப்புக்கள் அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்காக 14 நாட்கள் முதல் 94 நாட்கள் வரை தாமதமாகிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | குறிப்பிட்ட திகதியில் பங்களிப்புத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பங்களிப்புத் தொகை ஒதுக்கப்படுவது சம்பளம் செலுத்தும் போது என்பதனால் 20 திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், தாமதம் ஆகும் சந்தர்ப்பங்களில் தொலை பேசி மற்றும் கடிதங்கள் மூலம் பணம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடிதங்களின் மூலம் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம், நிதி ஆணைக்குழுவிற்கு மற்றும் உங்கள் அலுவலகத்திற்கு பிரதி ஒன்றுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. பணம் உரிய முறையில் அனுப்பப்படல் ஏனைய அனைத்து அரச அலுவலகங்களினதும் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நேரடியாக காசோலைகள் மூலம் பங்களிப்புத் தொகை அனுப்பப்படும் 05 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 756,996 தொகைக்கான 07 காசோலைகள் பல்வேறு காரணங்களினால் 2019 மே 24 முதல் 2019 ஒக்தோபர் 10 திகதி வரை காலப் பகுதியில் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. எனினும், 2021 ஜனவரி 14 திகதி அளவில் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அப்பங்களிப்புத் தொகை மீண்டும் கிடைத்திருக்கவில்லை. | திருப்பி அனுப்பப்பட்ட பங்களிப்புத் தொகையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அந்தக் காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் விசாரணை மேற்கொண்ட போதிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மீண்டுவரும் செலவு விடயங்களில் ம்ற்றும் 06 மூலதனச் செலவு விடயங்கள் தொடர்பாக சேமிப்புக்கள் முறையே ரூபா 7,684,757 தொகை மற்றும் ரூபா 10,032,998 தொகை காணப்பட்டதுடன், அவை ஒவ்வொரு செலவு விடயங்களுக்கான தேறிய ஏற்பாடுகளில் 11 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டதனால் ஏற்பாடுகள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | 05 மீண்டுவரும் செலவு விடயங்களின் செலவுகள் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதன் மூலமும், 07 மூலதனச் செலவு விடயங்கள் தொடர்பாக 2019/09/24 திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 05/2019 இன் படி 10% கட்டாயம் சேமித்தல் மூலமும் சேமிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 04 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 46,859,000 ற்கான ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக நி.பி. 66/69 ஏற்பாடுகள் ரூபா 16,365,000 தொகை மாற்றப்பட்ட பின்னர் அந்த செலவு விடயங்களில் ரூபா 8,006,579 தொகை அதாவது மாற்றப்பட்ட தொகையில் 48 சதவீதம் ஆகிய ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மூலதனச் செலவு விடயங்களுக்காக மாற்றப்பட்ட ஏற்பாடுகள் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை 5/2019 மூலம் செலவுகள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக சேமிக்கப்பட்டது. செலவு விடயம் 02-1508 ற்காக மாற்றப்பட்ட ஏற்பாடுகள் ஓய்வூதியம் திருத்தக் கோப்புக்கள் தயாரிக்கப்படாத காரணத்தினால் வரையறுக்கப்பட்டது. |

## 2.3 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் இணக்கக் கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 12 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த 05 வருடங்களை விட மிகையான காலம் நிலுவையாக காணப்பட்ட மீதி ரூபா 718,350 தொகையாக இருந்ததுடன், இந்த மீதிகள் 2021 ஜனவரி 14 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட முற்பண மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். ரூபா 45,639 தொகைக்கான உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்க்கும் படி அறிவிப்பதற்கு தகவல்கள் காணப்படாததுடன், ரூபா 328,002 தொகைக்கான உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 146,321 தொகைக்கான கடன் மீதி தொடர்பாக சட்ட மா அதிபரிடம் வினவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஆ) 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் படி அரசாங்க உத்தியோகத்தரின் முற்பண மீதி மற்றும் கட்டுப்பாட்டு கணக்கு மீதியிடையே ரூபா 315,738 ற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அந்த வித்தியாசத்தில் அடங்கியிருந்த ரூபா 85,877 தொகை 7 வருடங்களை விட பழமை வாய்ந்த மீதிகளாக காணப்பட்டதுடன், அந்த மீதிகளை மீளாய்வாண்டின் போதிலும் தீர்த்திருக்கவில்லை. | தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் படி மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கிடையே வித்தியாசத்தை இனங்கண்டு அதனை தீர்க்கப்பட வேண்டும். | அந்த ரூபா 315,738 தொகைக்கான வித்தியாசத்தினுள் ரூபா 85,877 தொகையில் ரூபா 72,885 தொகை பொருத்தமற்ற கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 12,992 தொகை பொருத்தமற்ற பதவியணி கொடுப்பனவு காணப்பட்டது. பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் இருவரின் தற்போதைய சேவை நிலையத்தை இனங் காண்பதற்காக இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திடம் வினவும் கடிதம் அனுப்புவதற்கும், ஏனைய பெண் உத்தியோத்தர் தொடர்பாக இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திடம் கிடைத்த தகவல்களின் படி இறுதியாக கடமையாற்றிய நிறுவனத்திற்கு விசாரணை கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 1 இன் படி மீளாய்வாண்டு இறுதி அளவில் மிகையாக செலுத்தப்பட்டிருந்த ஓய்வூதியங்களில் மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 591 மில்லியன் தொகை காணப்பட்டது. இந்த மீதி, 10 வருடங்களை மிகையான காலம் முதல் காணப்படும் ரூபா 8 மில்லியன் தொகையும், 5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான வீச்சில் காணப்படும் ரூபா 37 மில்லியன் தொகையும் 5 வருடங்களை விட குறைவான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 546 மில்லியன் தொகையும் அடங்கியிருந்தது. | ஓய்வூதிய மிகைக் கொடுப்பனவு தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த மிகைக் கொடுப்பனவினை தவணைகளாக மற்றும் முழுத் தொகையும் ஒரே தடவையில் அறவீடு செய்யப்படுகின்றது. தேவையான சந்தர்ப்பங்களில் நி.பி. 104 விசாரணை மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் பெற்றுக்கொள்ளும் ஏனைய ஓய்வூதியங்கள், வயது, மிகையாக செலுத்தியிருந்த பெறுமதி மற்றும் கோரிக்கை மீது தீர்மானிக்கப்படுவதினால் மிகை கொடுப்பனவுகளை அறவீடு செய்வதில் கால தாமதம் காணப்பட்டது. |
| (ஆ) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் 2019 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு இறுதி மற்றும் ஆரம்ப மீதிகளை இணக்கஞ் செய்யும் போது 444 பிரதேச செயலகங்களில் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த மீதிகளின் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. | முன்னைய ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக இருக்க வேண்டும். | பிரதேச செயலகங்களினால் அனுப்பப்படும் தகவல்களின் வித்தியாசங்களுக்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்படல் ஓய்வு பெறும் போது பணிக்கொடையை மிகைத்து அரசுக்கு அறவிடப்பட வேண்டிய தொகை, ஓய்வூதியத்தில் இருந்து அறவீடு செய்து அனுப்பும் சந்தர்ப்பங்களில், அம் மீதிகள் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்ததை சரி செய்தமையால் இந்த வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஜூன் 11 திகதிய 01/2019 இலக்கங் கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கையின் மூலம் 2017 ஜனவரி 01 திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றிருந்த அனைத்து ஓய்வு பெற்றோருக்கு 2019 ஜூலை 01 திகதி ஓய்வூதிய சீராக்கலுடன் இதுவரை பாதீட்டுத் தீர்மானத்தின் மூலம் மாதாந்தம் செலுத்தப்பட்டு வந்த ரூபா 3,500 ற்கான இடைக்கால படி கொடுப்பனவு நிறுவத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், அதற்கு முரணாக 214 ஓய்வு பெற்றோருக்கு விதவைகள் அநாதைகள் / தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்துடன் செலுத்தப்படும் வாழ்க்கைப் படியுடன் இடைக்காலப் படியும் செலுத்தப்பட்டமையால் 2019 ஜூலை 01 திகதி முதல் 2020 திசெம்பர் வரை அண்ணளவாக ரூபா 16,839,900 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ஓய்வூதியச் சுற்றறிக்கையின் மூலம் சம்பளம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதியம் பெறுவோருக்காக அந்த இடைக்காலப் படி செலுத்தப்படாதவாறு தரவு முறைமையில் உள்ளகக் கட்டுப்பாடு முன்னேற்றப்பட வேண்டியிருந்ததுடன், ஓய்வூதியம் மிகைக் கொடுப்பனவு தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் படி செயற்பட்டு மிகை கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். | முப்படைகளின் அங்கவீனர்கள் மற்றும் இறந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் திருத்தங்களுக்கு ஆளாகியமையால் இவ்வாறான சிக்கல் தன்மைகள் அடிக்கடி ஏற்பட்டிருந்தது. மேலும், எதிர்காலத்தில் குறிப்பிட்ட உத்தியோத்தர்களினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கையின் படி மற்றும் வழங்கப்படும் தீர்மானங்களின் படி மேலும் சிக்கல் தன்மையடைகின்றது. இதன் காரணமாக முப்படையினரின் சம்பளங்கள் மற்றும் படிகள், ஓய்வு பெறும் போது, நலிவு அடையும் போது, இறக்கும் போது செலுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் படிகள் நிரந்தர மாதாந்தப் படிகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு தீர்வொன்று வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சு நிதி அமைச்சு அரச சேவை, மாகாண சபை மற்றும உள்ளூராட்சி அமைச்சு, முப்படைகள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் என்பவற்றின் பங்களிப்புடன் குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிந்துரைகள் வழங்கும் படி பாதுகாப்பு அமைச்சிடம் 2020.12.15 திகதி கோரப்பட்டது. |
| (ஈ) | 2011 மே 16 திகதிய 04/2011 இலக்கங் கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு முரணாக 2007 செப்தம்பர் 05 திகதி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு, 2012 ஜனவரி முதல் 2020 பெப்ரவரி மாதம் வரை ரூபா 113,500 தொகையும் 2014 நவம்பர் 03 திகதிய மற்றும் 13/2014 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு முரணாக 2014 நவம்பர் முதல் 2019 மார்ச் வரை சேவை | சுற்றறிக்கைக்கு ஒத்ததாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் விதமாக தரவு முறைமையின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை முன்னேற்றம் செய்யப்பட வேண்டியிருந்ததுடன், ஓய்வூதிய மிகைக் கொடுப்பனவு | மிகையாக செலுத்தப்பட்டிருந்த இடைக்காலப் படி மாதாந்தம் அறவீடு செய்யக்கூடிய விதமாக தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 2020 திசெம்பர் மாதம் அளவில் அறவிடப் பட வேண்டிக் காணப்பட்ட மீதித் தொகை ரூபா 647,540 ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | ஓய்வூதியம் மற்றும் நலிவடைந்த ஓய்வூதியமாக ரூபா 180,500 தொகையும் 2016 ஏப்ரல் 27 திகதிய 03/2016 இலக்கங் கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு முரணாக ஆயுத படை சேவை இராணுவத்தினர் ஐந்து பேருக்காக நலிவடைந்த ஓய்வூதியத்துடன் ரூபா 486,500 தொகையும், இடைக்கால கொடுப்பனவு செலுத்தப்பட்டமையால் கூட்டுத்தொகை ரூபா 780,500 தொகையான இடைக்காலப் படி மிகையாக செலுத்தப்பட்டிருந்தது என 02 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | தொடர்பாக நிதிப் பிரமாணம் 103, 104 பிரகாரம் செயற்பட்டு மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்யப்பட வேண்டும். | |
| (உ) | தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு நாரம்மல பிரதேச செயலகத்தினால் 04 சந்தர்ப்பங்களில் பிழையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் மிகையாக செலுத்தப்பட்டிருந்த வாழ்க்கைப் படி, இடைக்காலப் படி, ஓய்வூதியம் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் ஓய்வூதியம் செலுத்த ஆரம்பித்திருந்தமையால் மிகையாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 1,067,609 ஆக காணப்பட்டது. | தரவு முறைமையின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை முன்னேற்ற வேண்டியதுடன், ஓய்வூதியம் மிகையாக செலுத்தப்படல் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் படி செயற்பட்டு மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்யப்பட வேண்டும். | மாதாந்தம் அறவீடு செய்வதற்காக தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 2020 திசெம்பர் மாதம் அளவில் அறவீடு செய்வதற்கு மீதியாகக் காணப்பட்ட தொகை ரூபா 966,253 ஆகும். |
| (ஊ) | 2010 செப்தம்பர் 07 திகதிய 8/2010 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2014 ஜனவரி 10 திகதிய 01/2014 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரிவுகள் 03 மற்றும் 04 இன் படி அரசாங்க ஓய்வூதியம் பெறும், வாழ்க்கைப் படி உடனான அரச மற்றும் கூட்டுத்தாபனம் போன்ற நிதிச் சட்ட நிறுவனங்களில் கடமை புரியும் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியத்துடன் வாழ்க்கைப் படி செலுத்தப்படக் கூடாது எனினும், தெரிவுப் கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு 08 பிரதேச | -மேற்படி- | மாதாந்தம் அறவீடு செய்வதற்காக தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 2020 திசெம்பர் மாதம் அளவில் அறவீடு செய்வதற்கு மீதியாகக் காணப்படும் உள்ள தொகை ரூபா 2,599,178 தொகையாகும். |

செயலகங்களினால் ஓய்வூதியம் பெறும் நியதிச் சட்ட நிறுவனங்களில் கடமை புரியும் 19 ஓய்வு பெற்றோருக்கு வாழக்கைப்படி என ரூபா 3,399,768 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தெரிவுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டவாறு வருடாந்தம் உயிர்ச் சான்றிதழ் இன்மையின் காரணத்தினால் கொழும்பு பிரதேச செயலகத்தில் 2018 ஆண்டிற்காக 66 ஓய்வு பெற்றோர்களின் மற்றும் 2019 ஆண்டிற்காக 78 ஓய்வு பெற்றோர்களின் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது. சில ஓய்வு பெற்றோர் காலமாகியிருந்தது எனவும், மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகையினை பெற்றுக்கொள்வதற்காக வங்கிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என காட்டப்பட்டிருந்த போதிலும் இறந்த ஓய்வு பெற்றவர்கள் எண்ணிக்கை மற்றும் மிகையாகச் செலுத்தியிருந்த தொகையினை இனங்கண்டிருக்கவில்லை. | இறந்துள்ள ஓய்வு பெற்றிருந்தவர்களுக்கு மிகைக் கொடுப்பனவு செய்திருந்தால் அதனை அறவீடு செய்யப்பட வேண்டும். | மீண்டும் உயிர்ச் சான்றிதழ் சமர்ப்பித்திருந்த ஓய்வு பெற்றோரின் ஓய்வூதியம் செலுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இறந்துள்ள ஓய்வு பெற்றோரின் மிகையாக செலுத்தப்பட்டுள்ளவற்றை பெற்றுக் கொள்வதற்காக வங்கிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், சில ஓய்வு பெற்றவர்கள் வெளிநாடு சென்றுள்ளவர்கள் எனவும் கிராம உத்தியோகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளதென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். |
| (ஆ) | இலக்கம் 1-52361 மற்றும் 21-30243 கொண்ட சிவில் மற்றும் விதவைகள் ஓய்வூதியம் இரண்டிற்கும் உரிமை கோரும் ஓய்வு பெற்று வெளிநாடு சென்றுள்ள பெண் ஒருவர் இறந்த பின்னர் 2019 ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்காக ரூபா 60,848 இற்கான தொகை ஒன்று மிகையாக கொடுப்பனவு செய்திருந்ததுடன் அத் தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | இறப்பு நேரிட்டவுடன் அறிவிக்கக் கூடிய விதமாக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஓய்வூதியம் மிகையாக கொடுப்பனவு செய்தல் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் படி செயற்பட வேண்டும். | 2019 மார்ச் மாதம் இறந்துள்ளதுடன், அந்த ரூபா 60,847 முழுத் தொகையையும் அறவீடு செய்வதற்காக இறப்பு சான்றிதழின் பிரதி ஒன்று மற்றும் கோரிக்கைக் கடிதம் வங்கிக் கிளைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தின் கழித்தல் ஆவணத்தின் படி இறந்த 4 ஓய்வு பெற்றோருக்காக ரூபா 719,872 தொகைக்காக மிகைக் கொடுப்பனவு அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் செயற்பட்டு மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்யப்பட வேண்டும். | இந்தத் தொகை அறவீடு செய்வதற்காக கிராம உத்தியோகத்தர் மூலம் மரபுரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஓய்வூதியத் தரவு முறைமையில் 2020 செப்தெம்பர் மாதத்தில் கொடுப்பனவுகள் தரவு முறைமைப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு பொது நிர்வாகச் சுற்றறிக்கை 6/2006 ஓய்வூதியத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாத 3906 கோப்புக்கள் காணப்பட்டது. மேலும் 2017 ஜனவரி 01 திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அனைத்து அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம், பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் 14/2019 படி சீராக்கல் மேற்கொள்ளல், 2019 ஜூன் 11 திகதிய 01/2019 ஓய்வூதிய சுற்றறிக்கையின் மூலம் 2019 ஜூலை 01 திகதி முதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் காணப்படாமை, யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களினால் கோப்புக்கள் காணாமல் போயிருத்தல், சம்பளங்கள் தொடர்பான சிக்கல்கள் போன்ற காரணங்களினால் 2021 ஜனவரி 13 திகதி அளவில் நடவடிக்கை எடுக்கப்படாத கோப்புக்களின் எண்ணிக்கை 39,373 தொகை காணப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 479,415 ஓய்வு பெற்றோரின் ஓய்வூதியம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், 39,373 ஓய்வு பெற்றோரின் ஓய்வூதியம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. கோப்புக்களில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் காணப்பட்ட காரணத்தினால் அந்த சீராக்கல்கள் தாமதமாகி உள்ளதென அவதானிக்கின்றேன். (தேசிய அடையாள அட்டை இலக்கம் காணப்படாமை, யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களினால் கோப்புக்கள் காணாமல் போயிருத்தல், சம்பளங்கள் தொடர்பான சிக்கல்கள்) |
| (உ) | பங்களிப்புத் தொகை திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக தெரிவுப் பரிசோதனையின் படி, ஓய்வூதியத் திணைக்களத்தினால் பங்களிப்புத் தொகைகள் சேகரிப்பட்ட போதிலும் ஒவ்வொரு பங்களிப்பாளரிடமும் அறவிடப்படும் பங்களிப்புத் தொகை தொடர்பாக தகவல்கள் காணப்படாமை மற்றும் குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்தே தகவல்களை பெற்றுக்கொள்ள நேரிட்டிருந்தது. அதன் காரணமாக பங்களிப்புத் தொகை அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஓய்வுபெறும் வரை | விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகை அறவீடு செய்யும் விபரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்வதற்காக போதியளவு தரவு முறைமை ஒன்று பேணப்பட்டு வர வேண்டும். விண்ணப்பம் கிடைத்த பின்னர் குறைபாடுகளை அறிவிப்பதற்கு தாமதம் | மாதாந்த பங்களிப்புத் தொகை அறவீடு செய்யும் அறிக்கை போலவே பேணிச் செல்வதும் சிக்கலான ஒன்றாகும். ஒவ்வொரு நாளும் கிடைக்கும் பூர்த்தி செய்யப்பட்ட கோப்புக்களுக்கு கொடுப்பனவு செய்தல், குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கோப்புக்களுக்கு பதில் அனுப்புவதற்கு நிறுவனங்கள் நீண்டகாலம் எடுத்தல், |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் ஒன்று காணப்படவில்லை என அறிந்திருக்காமை, இடமாற்றம் பெற்றுள்ளமையால் சம்பளப் பேரேட்டை பெற்றுக்கொள்ள முடியாமை, பங்களிப்புத் தொகை அறவீடு செய்த விபரங்கள் அடங்கிய பதிவேடுகள் உக்கி இருத்தல், நிறுவனத்தின் தகவல்கள் காணாமல் போயிருத்தல், கழிக்கப்பட்டுள்ள விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகை கடமையாற்றிய நிறுவனங்களில் இருந்து அனுப்புவதில் தாமதித்தல் போலவே அனுப்பப்படாமை போன்ற காரணங்களினால் பங்களிப்புத் தொகையை திருப்பிப் பெறுவதற்கு 07 சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தது. விண்ணப்பங்களின் குறைபாடுகளை அறிவிப்பதற்கு தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் கொடுப்பனவு தாமதமாகிய சந்தர்ப்பங்கள் 06 காணப்பட்டது. அத் தாமத காலம் 04 மாதங்கள் முதல் 3 வருடங்கள் இடைப்பட்டதாக இருந்தது. | இன்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோப்புக்களை சரியாக கண்டுபிடிக்க முடியாமை சில நிறுவனங்களில் விடய தானம் வித்தியாசப்படல், இடமாற்றம் காரணமாக கொடுப்பனவுகள் தாமதம் அடைதல் காணப்பட்டது. தற்போது இலகுவான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டி ருப்பதனால் கொடுப்பனவு அலுவல்கள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | ஓய்வூதிய தரவு முறைமையின் படி ஓய்வூதியம் பெற்ற திகதி குறிப்பிடப்படாத 5454 சந்தர்பங்கள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டன. மேலும் ஓய்வு பெற்றோரின் பிறந்த திகதி ஓய்வுபெற்ற திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்பங்கள், மற்றும் ஓய்வு பெற்றோரின் பிறந்த திகதிக்கு பின்னர் உள்ள திகதி ஒன்று ஓய்வூதியம் பெற்ற திகதி என குறிப்பிடப்பட்டுள்ள 130 சந்தர்ப்பங்களும் 2020 செப்தெம்பர் மாதம் அளவில் அவதானிக்கப்பட்டது. | ஓய்வூதிய கோவைகள் பரிசோதனை செய்யப்பட்டு ஓய்வூதியம் பெற்ற திகதி தரவு முறைமையில் சரிசெய்யப்பட வேண்டும். | 2016.10.08 திகதி முதல் ஓய்வுபெறும் உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய விபரங்கள் மற்றும் மையப்படுத்தப்பட்ட தரவு முறைமை ஊடாக பெற்றுக்கொள்ளல் மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2019 இன் படி ஓய்வூதிய திருத்தங்கள் மேற்கொள்ளும் போது ஓய்வு பெற்றோரின் தேசிய அடையாள அட்டை இலக்கம், ஓய்வுபெற்ற திகதி அடங்கிய தகவல்களை சரிசெய்வதன் ஊடாக அநேகமானோரின் தகவல்கள் சரிசெய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மீதியான தகவல்கள் சரிசெய்யப்படும். |

## 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 6 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2020 செப்தெம்பர் 02 திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐய வினாக்கள் தொடர்பாக கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 17,637,547 தொகையாகும். | நிதிப் பிரமாணம் 155 பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் பரிசோதனை மேற்கொண்டு கிடைத்துள்ள கணக்காய்வு ஐய வினா பதிவேடு குறிப்பிட்ட காலப்பகுதியின் பின்னர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கிடைத்துள்ள கணக்காய்வு ஐய வினாக்களில் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ் ஐய வினாக்களுக்கு விரைவாக பதில் அனுப்பப்பட வேண்டும். | கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகள் திணைக்களத்துடன் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து சரிசெய்யப்பட்ட பின்னர் பதில் அனுப்பவேண்டி இருந்தமையால் கால தாமதம் ஒன்று ஏற்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். |

## 3.4 மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதிய இலக்கம் 21-2012767 இன் கீழ் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் இறந்த பின்னர் மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகையில் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 86,756 தொகை 2020 ஒக்தோபர் 25 திகதி ஒரே தடவையில் செலுத்துவதாக இணங்கியிருந்த போதிலும் அந்த ஓய்வூதிய மிகைக் | மிகைக் கொடுப்பனவு நடைபெறாதவாறு இறக்கும் ஓய்வு பெற்றோரின் தகவல்கள் விரைவாக அறிவிக்கப்படக் கூடிய வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து | மீதித் தொகையை செலுத்தாமையால் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் 2020 ஒக்தோபர் 25 திகதி அத் தொகையை செலுத்துவதாக இணங்கியிருந்தனர். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த 2021 ஜனவரி 08 அளவில் 2 வருடங்களும் 5 மாத காலம் கழிந்திருந்த போதிலும் குறிப்பிட்ட தொகையை முற்றாக அறவீடு செய்திருக்கவில்லை. | நட்டத்தையும் அறவீடு செய்யவேண்டும். | |
| (ஆ) | 1991 ஜனவரி முதல் கங்கவட கோரளை, 2004 ஆகஸ்ட் முதல் ஹாரிஸ்பத்துவ மற்றும் 2011 மார்ச் முதல் குன்டசாலை ஆகிய பிரதேசங்களில் இருந்து தேசிய அடையாள அட்டை இலக்கம் 503334208v இன் கீழ் ஓய்வூதியம் பெற்றிருந்த ஓய்வு பெற்றவரின் கோப்பு பிரதேச செயலகங்கள் இடையே மாற்றப்பட்டிருந்த போதிலும் தரவு முறைமையை நாளதுவரை ஆக்கப்படாமையால் 2004 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரை கங்கவட கோரளை பிரதேச செயலகத்தில் இருந்தும் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. தரவு முறைமையில் காணப்படும் தகவல்கள் மீது 2008 ஜனவரி முதல் 2019 திசெம்பர் வரை அவ்வாறு ரூபா 2,184,885 இற்கான தொகை ஒன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. | கோப்பொன்று பிரதேச செயலகங்கள் இடையே மாற்றும் சந்தர்ப்பங்களில் தரவு முறைமை நாளதுவரை ஆக்கப்படுகின்றதா என பரிசோதனை செய்யக் கூடிய விதமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை முன்னேற்றம் செய்யப்பட வேண்டியதுடன் நி.பி. 103 மற்றும் 104 பிரகாரம் மிகையாக செலுத்தப்பட்ட தொகையையும் அறவீடு செய்ய வேண்டும். | செலுத்தப்பட்ட இரண்டை ஓய்வூதியம் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. 104 பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மிகையாக செலுத்திய தொகை ரூபா 2,169,551 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | இலக்கம் 01-603326 மற்றும் 21-500158 மூலம் சிவில் மற்றும் விதவை என 02 ஓய்வூதியங்கள் பெற்றுக்கொண்டிருந்த 2012 மே 30 திகதி இறந்த ஓய்வு பெற்ற பெண் உத்தியோகத்தருக்கு மிகையாகச் செலுத்தியிருந்த ரூபா 2,696,303 தொகைக்கான ஓய்வூதியத்தில் 2020 செப்தெம்பர் 18 திகதி அளவில் அறவீடு செய்யப்பட்டிருக்காத தொகை ரூபா 2,388,251 தொகையாகக் காணப்பட்டது. | இறக்கும் ஓய்வு பெறுவோர் தொடர்பான தகவல்கள் பெற்று தரவு முறைமையை நாளது வரை ஆக்கக் கூடிய விதமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் செயற்பட்டு நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். | இறப்பு தொடர்பாக அறிவிக்காமையால் மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மோசடி மேற்கொண்ட நபர் ரூபா 308,052 தொகை செலுத்தி மீதித் தொகையை செலுத்தத் தவறியமையால் கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் இலக்கம் 118/18 இன் கீழ் முறைப்பாடொன்று தாக்கல் செய்யப்பட்டு 24/2019 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலக்கம் 01-600772 இன் கீழ் ஓய்வூதியம் பெற்று வரும் 2013 நவம்பர் 07 திகதி இறந்துள்ள பெண் உத்தியோத்தரின் வங்கிக் கணக்கிற்கு இறந்து 29 மாத காலம் வரை ரூபா 582,423 தொகை ஓய்வூதியம் அனுப்பப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 581,916 தொகை ATM காட் பயன்படுத்தி பெற்றுள்ளதுடன், 2020 செப்தெம்பர் 18 திகதி வரை அத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. | இறக்கும் ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பான தகவல்கள் பெற்று தரவு முறைமையை நாளது வரை ஆக்கப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் செயற்பட்டு நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டும். | மோசடி மேற்கொண்டுள்ள நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக கம்பஹா விஷேட குற்றப் புலனாய்வு அலகின் இலக்கம் 119/19 (FCID) கீழ் முறைப்பாடொன்று செய்யப்பட்டு B25/2019 கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | தரவு முறைமையின் படி ஓய்வூதிய இலக்கம் 21-0-105353 கொண்ட ஓய்வு பெற்றவரின் மகளின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தி ஓய்வு பெற்றவர் இறந்து 86 மாத காலம் கடக்கும் வரை அவரின் மகளினால் பெறப்பட்டிருந்த ரூபா 1,562,470 தொகையில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,196,336 தொகை ஒன்று அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. மிகைக் கொடுப்பனவிற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்ட அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் இது வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறக்கும் ஓய்வு பெற்றோர் தொடர்பான தகவல்களை பெற்று தரவு முறைமையை நாளது வரை ஆகக் கூடிய விதமாக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் செயற்பட்டு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். | மாதாந்தம் ரூபா 20,000 வீதம் செலுத்தப்படுவதுடன் 2020 திசெம்பர் மாதம் அளவில் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மீதி ரூபா 1,116,336 ஆகும். |
| (ஊ) | கல்னேவ பிரதேச செயலகத்தில் உரிமை இல்லாத விதவை ஒன்றின் கணக்கிற்கு ரூபா 1,596,640 தொகை செலவு வைக்கப்பட்டு அந்தப் பணம் ஓய்வூதிய பெண் உத்தியோகத்தரினால் பெறப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர் 22 திகதி அளவில் ரூபா 1,000,000 திருப்பிச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 596,640 தொகையினை 2020 செப்தெம்பர் 18 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மிகைக் கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். | அந்த பெண் உத்தியோத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்காக 2020 செப்தெம்பர் 30 திகதி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இது வரை பெண் உத்தியோகத்தரின் அடைக்கல உத்தியோகத்தரின் அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | குருவிட பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய தரவு முறைமையில் தரவுகளை மாற்றம் செய்து நிலுவை ஓய்வூதியம் என பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த கணக்காளரினால் 2009 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை அவரின் | நிதிப் பிரமாணம் 103, 104 இன் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களிடம் மேற்கொள்ளப்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டும். | இந்த கணக்காளர் சேவையில் இருந்து அகற்றப்பட்டார் என இரத்தினபுரி மாவட்டச் செயலாளரின் இலக்கம் DSRT/DASH/HRM/10/6/3-3 மற்றும் 2020.06.06 திகதிய |

| | | |
|---|---|---|
| கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 6,758,120 இற்கான தொகை 2020 செப்தெம்பர் 18 வரை அறவீடு செய்திருக்கவில்லை. | | கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தாபனக் கோவையின் அத்தியாயம் II பந்தி 13.3 பிரகாரம் பதில் கடமை நியமனம் செய்யப்பட வேண்டியது நிரந்தர நியமனம் ஒன்று மேற்கொள்ளும் வரை தற்காலிக பரிகாரம் ஒன்றாக மாத்திரமே ஆகும். எனினும் பதவிக்கு முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேவைக்கு தேவைப்படின் நிரந்தர நியமனம் தாமதம் இன்றி செயற்பட வேண்டும். முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் தேவைப்படாவிடின் திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்கள் இடையே கடமைகள் பகிரப்பட வேண்டிய போதிலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் அமைப்பு வரைப் படத்தின் படி சிரேஷ்ட மட்ட 4 பதவிகள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டிருந்த பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் 07 பேருக்காக 2020 ஜுன் 24 திகதி வரை பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. அப் பதவிகளில் பதில் கடமைக் காலம் 08 மாதங்கள் முதல் 65 மாதங்கள் வரை காணப்பட்டது. | தாபனக் கோவையின் அத்தியாயம் II பந்தி 13.3 பிரகாரம் செயற்பட வேண்டும். | நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தகைமை உடைய உத்தியோகத்தர்கள் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டிருக்காமையால் தற்போது இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் அனுபவம் மற்றும் மூப்பு அடிப்படையில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது பதில் கடமை ஆற்றுவதற்காக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வெற்றிடமாகக் காணப்படும் பிரதேச செயலகங்களுக்கு அண்மையில் உள்ள பிரதேச செயலங்களின் உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. வெற்றிடங்களுக்காக இணைப்பதற்கு 2020 பெப்ரவரி 28 திகதிய கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |